# கவிதை இலக்கியத்தில் மனித நேய வெளிப்பாடு

# Humanity in Literary Poetry

*முனைவர் இரா. ஜெப மலர்*
புனித ஜாண்ஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, அம்மாண்டிவிளை
கன்னியாகுமரி, தமிழ்நாடு, இந்தியா

**Dr. R. Jeba Malar**
*Assistant Professor of Tamil*
*St. Johns College of Arts and Science*
*Ammandivilai, Kanyakumari, Tamil Nadu, India*

**Citation**: Jeba Malar, R. "Humanity in Literary Poetry." *Journal of Tamil Culture and Literature*, vol. 5, no. 2, 2025, pp. 13-17.

*https://doi.org/10.5281/zenodo.19762066*

### *ஆய்வுச் சுருக்கம்*
*பகுத்தறிவின் உச்சகட்ட நிலையாகவே மானுட நேயம் பேசப்படுகின்றது. மானுட நலனை அடிப்படையாகக் கொண்டது மானுட நேயக் கோட்பாடாகும். மானுட நேயம் பற்றி இலக்கியங்களிலும் மேடைகளிலும் பரவலாகப் பேசப்படுகின்றது. ஆனால் மக்கள் அவற்றைக் கடைப்பிடிக்கின்ற நிலையானது மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. இருப்பினும் கவிதை இலக்கியங்களில் மனிதநேயச் சிந்தனை எவ்வாறு வெளிப்படுகின்றது என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*
***கலைச்சொற்கள்:*** *மனிதநேயம், மனிதஉறவு, வன்முறையினை ஒழித்தல், சாதி ஒற்றுமை, லஞ்சம் ஒழித்தல், வறுமையினை அகற்றுதல், அறியாமை அகற்றுதல் போன்றவை*

### Abstract
*In rational thinking humanity is seen as the highest asset. The welfare of human is the basisc theory of humanity. Although humanity is spoken in literature anad stages, people's humanistic approach towards life is far lesser. This research article explores how humanity is been told in Tamil literary poetry.*
***Keywords****: Humanity, Human Relations, Abolition of Violence, Caste Unity, Eliminating Bribery, Alleviation of Poverty, Relieve Ignorance*

### மனித நேயம்

*மனிதநேயம் என்பது மனிதனுக்கு மனிதன் செலுத்தக்கூடிய பரிவு கலந்த அன்பாகும். உலகிலேயே மிகவும் வல்லமை வாயந்ததாகக் காணப்படுவது அன்பாகும். அன்பில்லாத மனிதனிடம் மனிதநேயம் என்ற உயரிய குணம் இருக்க சிறிதளவும் வாய்ப்பில்லை. பிறருக்கு உதவிகள் செய்யவில்லையாயினும் அவர்களுக்குத் தீமைச் செய்யாமல் இருப்பதே சிறந்தது என்பதைக் கணியன் பூங்குன்றனார்,*

***நல்லது செய்தல் ஆற்றீராயினும்***
***அல்லது செய்தல் ஓம்புமின் (புறநானூறு - 58)***

*என்ற புறநானூற்றுப் பாடல் வழியாக மக்களுக்கு அறிவுரை வழங்குகின்றார்.*

*மனித மனம் அன்பிற்காக ஏங்கக் கூடியது. அன்பு கிடைக்கின்ற போது முழு மனநிறை வினைப் பெறுகின்றது. அனைத்து மக்களின் மனத்தின் ஓரத்திலும் மனித நேயப் பண்பானது*

காணப்படுகின்றது. அது வெளிப்படுத்தப்படும் சூழல் மனிதனுக்கு மனிதன் வேறுபாடு உடையனவாகக் காணப்படுகின்றது. கவிதைகள் அனைத்துமே மக்களுக்கு அறிவுரை வழங்கும் எண்ணத்தில் படைக்கப்படுகின்றன. மனித மனம் உடல் பசி, பணப்பசி போன்ற பல பசிகளில் கட்டுண்டு கிடப்பதாலும் கிடைக்கின்ற அனைத்துப் பொருட்களையும் பகிர்ந்து கொள்ளாமல் தனக்கென்று வைத்துக் கொள்வதாலும் சகோதரர் அயலகத்தார் போன்றோரிடம் மனமுறிவுகள் ஏற்படுகின்றன. மக்கள் அன்போடு வாழவேண்டுமானால் மக்களிடையே பொறாமையற்ற குணம் தேவை என்பதைச் செறுவைச் சந்திரபாபு,

***சமூகம் முண்டியடித்து முன்னேறுகிறது***
***நான் முன்னே நான் முன்னே என்றும்***
***எனக்கு வேண்டும் எனக்கு வேண்டும் என்றும்***
***எல்லோரும் போட்டி போடுகிறார்கள்***
***அனைவருக்கும் உரியதே***

அதை அனுபவிக்க நிதானம் வேண்டும் (இளையச்சமுகமே, பக்கம்-47) என்ற கவிதை வரிகள் மூலம் மக்களுக்கு அறிவுரையாக கூறுகின்றார்.

ஒருவரையொருவர் தவறு செய்கின்ற போது மன்னித்தலே சிறந்த மனிதநேயப் பண்பாகும். தெரியாமல் செய்கின்ற தவறுகளும் தெரிந்து செய்கின்ற தவறுகளும் காணப்படுகின்றன. தவறுகளை மன்னித்து வாழ்வதை,

***நம்மை மதிப்பவரை நாளும் மதிப்போம்***
***நம்மை பிரிப்பவரை நாளும் எதிர்ப்போம்***
***பணத்தை மதிப்பவரின் நட்பை விடுப்போம்***
***வன்முறையென்றால் வாளெடுத்து அழிப்போம்***
***வஞ்சம் பஞ்சமது இல்லாமல் ஒழிப்போம்***
***தெரியாத தவறெனில் மன்னித்து விடுவோம் (மேலது பக்கம்- 56)***

**மனித உறவு**

மனித வாழ்க்கையில் ஏற்படும் இன்பங்களையும் துன்பங்களையும் பகிர்ந்துக் கொள்ள மனித மனதுக்கு உறவு தேவைப்படுகின்றது. குடும்பத்தில் காணப்படும் அன்பு, பாசம் போன்றவற்றால் உறவுகள் வளர்ச்சிப் பெறுகின்றது. குடும்ப உறவுகள் வளர்ந்தால் மனித உறவுகள் தானாக வளர்ச்சியடையும். மனித உறவுகள் வலுப்பெறுகின்ற போது முதியோர் இல்லங்களும் அனாதை காப்பகங்களும் தொட்டில் குழந்தைத் திட்டமும் அழிக்கப்படும். இவற்றிற்கு மனிதனின் மனமே சாட்சி என்பதை,

***மனதின் சாட்சியே மாபெரும் தெய்வம்***
***மனித உறவே மாபெரும் கோவில்***
***மானிடன் இதனை மறந்திடலாமா***
***மாபெரும் உறவை முறித்திடலாமா***

***(கூந்தலைத் தட்டி முடி, 2003, பக்கம்- 73)***

என மனித உறவின் இன்றியமையாதத் தன்மையை வெளிப்படுத்துகின்றார். வீட்டில் உறவுகளும் நாட்டில் சாந்தமும் உலகினில் ஒற்றுமையும் வளர்ந்தால் ஒளிதரும் காலம் தோன்றி மானுட நெஞ்சில் மகிழ்ச்சி தோன்றும் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

மனித உறவில் மிகவும் மகத்தானது நட்பாகும். அந்நட்பின் இலக்கணத்தை,

***நட்பில் சாதி இல்லை***

***நட்பில் மதங்கள் இல்லை***
***நட்பில் பேதம் இல்லை - அதனால்***
***நட்பில் குறைகள் இல்லை***
***மனங்கள் தெளிந்துகூடி***
***உயிரோடு கலப்பது நட்பு***
***நட்பிற்கும் கற்புண்டு நண்பா***
***நட்பிலும் உண்மை வேண்டும்***
***நட்பிலும் நேர்மை வேண்டும்***
***நட்பிலும் தூய்மை வேண்டும்***
***நட்பிலும் மேன்மை வேண்டும்***

***(தென்றல் தீண்டாத நந்தவனங்களுக்கு, 2001, பக்கம்-81)***

*என்ற வரிகள் மூலம் மனித உறவு வலுப்பெற நட்பே மிக மிக அவசியம் என தெளிவுப்படுத்துகின்றார்.*

*பெற்றோர் பிள்ளைகளிடம் காணப்படும் உறவு வலுப்பெற வேண்டுமாயின் மனமொத்த அன்போடு பெற்றோர்கள் செயல்பட வேண்டும். நூலைப் போல சேலை தாயைப் போல பிள்ளை என்ற வரிக்கேற்ப பெற்றோரின் ஒவ்வொரு செயலையுமே பிள்ளைகள் பின்பற்றுகின்றனர் என்பதை,*

***நமக்குள் மனவேற்றுமையென்றால்***
***மனிதநேயம்***
***மழலைகளுக்குள் மரத்துப்போகும்***
***அன்பே பிஞ்சுகளைப்***
***புற்றீசல்களாக்க புறப்பட வேண்டாம்***

***(சுதந்திர அடிமைகள், 2002, பக்கம்-62)***

*என்ற வரிகள் மூலம் விளக்குகின்றார். வீதிச் சண்டையாயினும் குழந்தைகள் சிறந்தவர்களக வளர வேண்டுமாயின் வீட்டிற்குள்ளேயே நிறுத்தி விடுவது சிறப்பானதாகும்.*

**வன்முறை ஒழித்தல்**

*இன்றைய சமுதாயத்தில் சாதி வெறியினாலும் மதவெறியினாலும் வன்முறைகள் அதிகரித்துக்கொண்டே வருகின்றன. மனிதனை மனிதனாக மதிப்பதோடு பிற உயிர்களையும் தன் உயிர்போல மதித்து வாழ்கின்ற போது வன்முறை என்ற சாக்கடையில் நீச்சலடிக்காத புதிய சமுதாயம் உருவாகும் என்பதை,*

***குருதிப் பிரியர்களே***
***மனித குருதிதான்***
***நீங்கள் குடிக்கும் நீரா***
***தயவு செய்து மனித உயிர்களைப்***
***பலியெடுத்து மகிழ்வதை***
***நிறுத்தி விடுங்கள் (புன்னகை, 2002, பக்கம் 33)***

*என்ற வரிகள் மூலம் விளக்குகின்றார்.*

**சாதி ஒற்றுமை**

*ஆண், பெண் என்ற இரு நிலைகளில் படைக்கப்பட்ட மனிதர்கள் தான் செய்கின்ற*

*தொழிலை அடிப்படையாக வைத்தே பல சாதிகளை உருவக்கி கொண்டனர். சாதியினால் பல தீயச்செயல்கள் நாளுக்கு நாள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அனைவரும் சமம், சாதிகள் இல்லாத சமுதாயம் உருவாக வேண்டும் என்பதை,*

***உங்கள் சாதிகளைச்***
***சாக்கடைப் புழுக்களுக்குத்***
***தின்னக் கொடுங்கள்***
***சாதிகள் இல்லா மனிதம் காணுவோம்***
***சாதனைகள் செய்யும் மனதைப் பாடுவோம் (புன்னகை, 2002, பக்கம்- 34, 36)***

*என்ற கவிதை வரிகள் உணர்த்துகின்றன.*

**லஞ்சம் ஒழித்தல்**

*லஞ்சம் கொடுக்க மக்கள் தயாராக இருப்பதனால் வாங்குகின்றவர்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகின்றது. பணத்தின் மூலம் எல்லாவற்றையும் பெற்று விட முடியும் என்ற எண்ண அலையில் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அதோடு பணம் இருப்பவரின் குணமும் நாளுக்கு நாள் மாற்றமடைகின்றது. பணம் இருந்தால் படிப்பு, வேலை போன்ற அனைத்தையும் மிகவும் எளிமையான முறையில் பெற்றுக் கொள்ள முடிகின்றது. பணம் இல்லாதவர்களின் பதவிகள் பறிக்கப்படுதலைப் பற்றி,*

***மருத்துவராகும் எண்ணங் கொண்டோர்***
***மண்வெட்டி வாழத்தலைப் பட்டதும்***
***ஆசிரியராக ஆசைப்பட்டவன்***
***அடுப்படி வேலைக்குச் சென்று விட்டதும்***
***வழக்கறிஞனாகும் எண்ணங் கொண்டோர்***
***வயலிலே உழன்று வாழ்வைக் கழித்ததும்***
***உன்னாலே தானே பணமே (மேலது பக்கம் 15)***

*என பணத்தின் மூலம் மனிதநேயம் அழிக்கப்படுவதை ஆசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார்.*

**வறுமை அகற்றுதல்**

*சமுதாயத்தில் மனிதன் இரவு பகலாக உழைத்தாலும் வேலைக்கேற்ற சரியான கூலி கிடைக்காத்தால் வறுமை நிலைக்கு பலர் தள்ளப்படுகின்றனர். அதோடு எந்தத் தொழில்களைச் செய்பவராயினும் அவர்களும் நம்மில் ஒரு அங்கம் என நினைத்து அன்பு செலுத்துவதே சிறப்பானதாகும். ஒருவர் தம்மிடம் வந்து ஈயென இரக்கின்ற போது இல்லை எனக் கூறாது வாரி வழங்குவதே சிறப்பானதாகும். வேலைகள் செய்து உயர்ந்த மக்களைப் பொறாமைக் குணத்தோடு பார்க்காமல் அன்புணர்வோடு பார்ப்பதை,*

***என் வீட்டுப் பூந்தொட்டியில்***
***மகனும் மகளும்***
***தண்ணீர் விடுகின்றனர்***
***வேலைக்காரி தன் மகன் படிக்கப்***
***பணம் கேட்டாள்***
***தாராளமாக தந்து உதவினாள்***
***இப்போது***
***தன் மகனோடு வெளியூரில்***

*வாழ்கிறாள் அந்நாள்*
*வேலைக்காரி (மனித நேயம், 2003,பக்கம்- 107)*

*என பாசப் பிணைப்பு சுட்டிக்காட்டப்படுகின்றது.*

**அறியாமை அகற்றுதல்**

*பெருந்தலைவர் காமராஜர் மக்களின் அறிவுக் கண்ணைத் திறப்பதில் அதிக அக்கறைக் கொண்டிருந்தார். இல்லற வாழ்வில் மூழ்காமல் குடும்பத்திற்கு என்று பொருள் சேர்க்காமல் அனைத்தையும் வறுமையில் வாடும் மக்களுக்காகச் செலவிடுவதில் அதிக நாட்டம் கொண்டிருந்தார். அறியாமை இருளை அகற்ற வேண்டும் என்பதற்காகவே மதிய உணவுத் திட்டத்தினைக் கொண்டு வந்தார் என்பதனை,*

*வறுமைக் கொண்ட மாந்தர்களின்*
*வாழ்வு மிளிர வேண்டும்*
*மதிய உணவுத் திட்டத்தை*
*மாணவர்க்களித்த என் தலைவர்*
*கண்ணொளியாம் கல்வியதை- எவர்க்கும்*
*கிடைக்கச் செய்த காமராசர் (புன்னகை, 2002, பக்கம் 39)*

*என்ற வரிகள் மூலம் அறியமுடிகின்றது.*

*இவ்வாறு மனித நேயம் பற்றி பேசப்படுகின்ற சமுதாயத்தில் மனிதநேயம் வளர வேண்டுமானால் மனிதர்களிடையே காணப்படும் தீயச் செயல்களான லஞ்சம், வறுமை, ஊழல், சாதி வெறி, வன்முறை போன்றவை அகற்றப்பட்டு மனிதனுக்கு மனிதன் அன்பினை வளர்க்க வேண்டும் என்பது சிறந்த கருத்தாகும்.*

**துணை நூற்பட்டியல்**

1. இளைய சமூகமே, 2004, செறுவைச் சந்திரபாபு, பனைத்தொழிலாளர் வளர்ச்சி இயக்கம், மார்த்தாண்டம்.
2. கூந்தலைத் தட்டி முடி, 2003, கமல செல்வராஜ், சித்திராலயம், அருமனை- 629 151.
3. சுதந்திர அடிமைகள், 2002, குமரி ராஜூ, ராஜூ பதிப்பகம், படந்தாலுமூடு, குமரிமாவட்டம்.
4. தென்றல் தீண்டாத நந்தவனங்களுக்கு, 2001, சதேவா, லியோ புக் டிஸ்ட்ரிபியூட்டர், சென்னை -35.
5. புறநானூறு, 1999,துரைசாமிப்பிள்ளை, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை-18.
6. புன்னகை, 2002, வழுதூர் மு. செல்லத்துரை, நிலா ஆப்செட் பிரிண்டர்ஸ்.
7. மனித நேயம், 2003, விஸ்வநாதன், மாஸ்டைப்போ கிராபிக், சென்னை- 18.

**References**

1. Ilaya samoogamey 2004, Seruvai Santhirababu Panai Tholilaralar Valarchi Iyakam Marthandam
2. Konthalai Thati Mudi Kamala selvaraj Sithiralayam Arumanai
3. Suthanthira Adimaigal Kumari Raju Raju Pathipagam Padanthalamoodu KK district
4. Thental Thendatha Nanthavanangaluku,satheva leo book distributor, Chennai 35
5. Purananooru, 1999, Duraisamy Pillai, Thirunelveli, Thenninthiya Saiva Sithantha Noor Pathipu Kalagam
6. Punnagai 2002, Valuthoor. M. Chella Durai, Nila Offect Prints
7. Manitha Neayam 2003, Visvanathan, Mastypo Grapic, Chennai -18